10/=

பக்கங்கள் 06

எதிரொலி

Ethiroli

குரல் 01 | அதிர்வு 41 | வெள்ளிக்கிழமை ஜூன் 16 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48

## ஐங்கரநேசனே குற்றவாளி

### சுமந்திரன் அறிக்கை




அமைச்சர் ஐங்ரநேசன் மட்டுமே குற்றவாளி. ஆனால் முதலமைச்சர் குருகுல ராஜாவையும் 06

### சூழ்ச்சி செய்தவர்களுக்கு

# மக்கள் புரட்சியே பதில்!

## உணர்வுப்பெருக்கோடு முதலமைச்சர்



“என்னைப் பதவியில் இருந்து தூக்கியெறிய முற்பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் நல்லதொரு பதிலை வழங்கியிருக்கிறார்கள். எனக்காக திரண்டுள்ள மக்கள் எழுச்சியைப் பார்க்கும் போது, நான் செல்லும் பாதை சரியானது என்று உணர் கிறேன்” இவ்வாறு உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார் வட மாகாண முதலமைச்சர் 06


## “தலைவா வா தலைமை ஏற்க வா”

இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து முதலமைச்சரின் இல்லம் வரை முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்து பேரணி ஒன்று நடைபெற்றது.

இதில் சுமார் ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்ட இந்தப் பேரணியில் “தலைவா வா. தலைமையேற்க வா”, “விக்கி ஐயாவின் பேச்சு தமிழரின் மூச்சு”, “சீனிக்கள்ளன் சிவஞானத்துக்கு வேண்டுமா முதல்வர் பதவி?”, “நிறுத்து நிறுத்து தமிழரசுக் கட்சியின் அடாவடியை நிறுத்து” என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் முதலமைச்சர் சீ.விக்கினேஸ்வரன் நன்றி தெரிவித்து உரையாற்றினார். (அ)

## முதலமைச்சருக்கு ஆதரவாக
# முடங்கியது வடக்கு



வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரனுக்கு ஆதரவாகவும் அவர் மீது தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்தள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கண்டித்தும் வட மாகாணம் முழுதும் கடையடைப்பால் இன்று முடங்கியது.

இந்தக் கடையடைப்புக்கு தமிழ் மக்கள் பேரவை நேற்று மாலை அழைப்பு விடுத்திருந்தது. இதனால் இன்றையதினம் கடையடைப்பா? இல்லையா என்பது குறித்து மக்களிடையே குழப்ப நிலை நீடித்தது.

இந்தக் குழப்பத்தை அதிகரிக்கும் வகையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் தமது முகப்புத்தங்கள் வாயிலாக நாளை கடையடைப்பு இல்லை என்று செய்திகளைப் பரப்பினர்.

எனினும் இன்று தமிழ் மக்கள் கடையடைப்புக்கு முழு ஆதரவை அளித்துள்ளனர்.

வட மாகாணத்தின் மன்னார் தவிர்ந்த ஏனைய சகல மாவட்டங் களிலும் போக்குவரத்துச் சேவை முற்றாக நிறுத்தப்பட்டது. 06


## தமிழரசுக் கட்சிக்கு அதிரடிப்படை பாதுகாப்பு



முதலமைச்சருக்கு எதிராக கொண்டுவரப் பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று வடக்கு எங்கும் ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிலையில் யாழ் நகரமெங்கும் விசேட அதிரடிப்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். குறிப்பாக தமிழரசுக் கட்சி அலுவலகங்கள் மற்றும் தமிழரசுக் கட்சி மாகாண சபை உறுப்பினர்களின் வீடுகளை அண்மித்த பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் அதிகம் ரோந்து புரிந்த தாகத் தெரியவருகின்றது. (எ)

## பழிவாங்கும் தமிழரசு: வவுனியாவில் சுவரொட்டி




வவுனியா மாவட்டத்தின் சில இடங்களில் ‘முதலமைச்சரைப் பழிவாங்கும் தமிழரசுக்கட்சி’ எனும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

‘முதலமைச்சரைப் பழிவாங்கும் தமிழரசுக்கட்சி, அரசுக்கூட்டுச்சதியை முறியடிப்போம்’ எனும் தமிழரசுக்கட்சிக்கு எதிரான வாசகங்கள் தாங்கிய சுவரொட்டிகள் வன்னி மக்கள் எனும் பெயரில் ஒட்டப்பட்டுள்ளன. அத்துடன் சில பகுதிகளில் கறுப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன. (உ)



# 8,000

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 8000 ஓட்டங்களை வேகமாகக் கடந்த வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை விராட் கோஹ்லி நிகழ்த்தியுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் நேற்றைய அரையிறுதியாட்டத்தில் பங்களாதேஷை இந்தியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி 88 ஓட்டங்கள் சேர்த்தபோது ஒரு நாள் போட்டியில் 8000 ஓட்டங்களை அதி வேகமாக கடந்த வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

நேற்றைய போட்டி கோஹ்லிக்கு 175ஆவது போட்டியாகும்.

இதற்கு முன்பு தென்னாபிரிக்க அணியின் தலைவர் டிவில்லியர்ஸ் 182 போட்டிகளில் இந்த இலக்கைத் தொட்டதே சாதனையாக இருந்தது. அதை கோஹ்லி முறியடித்திருக்கிறார். 28 வயதான விராட் கோஹ்லி இதுவரை 27 சதங்கள், 42 அரை சதங்கள் உட்பட 8,008 ஓட்டங்களை குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சங்காவை பிரதிசெய்த அஜ்மல்

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயித் அஜ்மல், இலங்கை வீரர் சங்காரவின் டுவிட்டரை அப்படியே பிரதியடித்து டுவிட் செய்துள்ளார்.

சம்பியன்ஸ் லீக் தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள பாகிஸ்தான் அணிக்கு முன்னணி வீரர்கள் பலர் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இதேபோன்று பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளரான சயித் அஜ்மல், இந்தியாவுக்கு எதிரான போட்டிக்குப் பின்னர் சிறப்பாகச் செயற்பட்டு இறுதியாக இங்கிலாந்து அணியை வீழ்த்திவிட்டீர்கள் என்று டுவிட் செய்திருந்தார்.

இதே டுவிட்டைத்தான் இலங்கை அணியின் முன்னாள் வீரரான சங்கஹாரா 15 நிமிடங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் அணிக்குத் தெரிவித்திருந்தார்.

அதை சயீத் அஜ்மல் அப்படியே பிரதிசெய்துள்ளார் என்று இணையவாசிகள் சமூகவலைத்தளங்களில் பரப்பி வருகின்றனர். (ஒ)

# பிரிக்கப்பட்ட இரட்டையர்



அமெரிக்காவில் தலை ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் இரு தலைகளும் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணத்தைச் சேர்ந்த தம்பதியினருக்கு 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் தலைகள் ஒட்டிய நிலையில் இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன.

இந்த நிலையில் இவற்றைத் தனித்தனியாக பிரிப்பதற்காக அமெரிக்காவின் பிலடெல்ஃபியா மாகாணத்தில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

கடந்த 7ஆம் திகதி நரம்பியல் துறை மற்றும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் தலைமையில் 30 பேர் கொண்ட குழுவினர் 11 மணி நேர அறுவை சிகிச்சை மூலம் இரண்டு தலைகளையும் வெற்றிகரமாக பிரித்துள்ளனர்.

ஏற்கனவே இம்மருத்துவமனையில் வயிற்றுப் பகுதி, முதுகுப் பகுதி, இடுப்புப் பகுதி ஆகிய பகுதிகள் ஒட்டிப் பிறந்த குழந்தைகள் என 23 அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. (ஒ)


# நவாஸ் ஆஜர்

பாகிஸ்தானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள 'பனாமா கேட்' ஊழலில், கூட்டு விசாரணைக்குழு முன் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆஜராகினார்.

பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த பிரபலங்கள், சட்டவிரோதமாக வெளிநாடுகளில் ரகசிய முதலீடுகள் செய்திருப்பதாகவும், வங்கிகளில் ரகசியமாக பணத்தை பதுக்கி வைத்திருப்பதாகவும் சர்வதேச புலனாய்வு செய்தியாளர்கள் கூட்டமைப்பு 'பனாமா லீக்ஸ்' என்ற பெயரில் கடந்த ஆண்டு ஆவணங்களை வெளியிட்டது.

இந்த நிலையில், பிரதமர் நவாஸ் ஷெரீப்பிடமும் விசாரணை நடத்த முடிவு செய்து, 15ஆம் திகதி நேரில் ஆஜராகுமாறு கூட்டு புலனாய்வுக்குழு சம்மன் அனுப்பியிருந்த நிலையிலேயே அவர் நேற்று ஆஜரானார்.

விசாரணை முடிந்த பின்னர் நவாஸ் ஷெரீப், "இது பாகிஸ்தான் அரசியல் சாசன வரலாற்றில் ஒரு மைல்கல். நான் எனது ஒவ்வொரு ரூபாய்க்கும் கணக்கு கொடுத்துள்ளேன்" என்றார்.



# ஐபோன் 8இல் வயலர்ஸ் சார்ஜர்



உலகில் அதிகம் எதிர்பார்க்கப்படும் அப்பிள் ஐபோன் 8 சிறப்பம்சங்கள், வடிவமைப்பு, விலை என பல்வேறு தகவல்கள் கடந்த சில மாதங்களாக வெளியாகி வருகின்றன.

அந்த வரிசையில் ஐபோன் 8 ஸ்மார்ட் கைத்தொலைபேசியில் வயர்லெஸ் சார்ஜிங், வோட்டர் ப்ஷரூப் வசதி மற்றும் பல்வேறு புதிய அம்சங்கள் வழங்கப்படும் என சமீபத்தில் வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

வயர்லெஸ் சார்ஜிங் தொழில்நுட்பம் மூலம் ஐபோன்களை வை-பை ரவுட்டர் போன்று சார்ஜ் செய்யும் என்றும் கூறப்பட்டது. (ஒ)

# தினகரன், சுகாதரன் இரகசிய சந்திப்பு

பெங்களூருக்கு நேற்று இரகசியமாகச் சென்ற டி.டி.வி. தினகரன், சிறையில் வைத்து சுதாகரனைச் சந்தித்துப் பேசினார். சுமார் 40 நிமிடங்கள் சுதாகரனுடன் அவர் பேசினார். பின்னர் அவர் தமிழகத்திற்கு புறப்பட்டு சென்றார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "60 நாட்கள் பொறுமை காக்குமாறு சசிகலா அறிவுறுத்தியுள்ளார்" என்றார்.

# இணையும் சிவாக்கள்



அஜித் நடிப்பில் வெளிவந்த 'வீரம்', 'வேதாளம்' மற்றும் 'விவேகம்' ஆகிய படங்களை இயக்கிய சிவா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மோகன்ராஜா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'வேலைக்காரன்' படத்தின் படப்பிடிப்புகள் முடிவடைந்து தற்போது டப்பிங் பணிகள் தொடங்கியுள்ளன.

இப்படத்தை தொடர்ந்து சிவகார்த்திகேயன், பொன்ராம் இயக்கத்திலும் 'இன்று நேற்று நாளை' படத்தை இயக்கிய ரவிக்குமார் இயக்கத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இதற்கிடையில், ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் தயாரிக்கும் படத்தில் சிவகார்த்திகேயன் - சிவா இணையவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.


தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி
எதிரொலி Ethiroli
ஊடக அனுசரணையில்
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின்
98ஆவது ஆண்டு நிறைவையொட்டி
பெரு விளையாட்டு விழா-2017
17.06.2017 (சனி) - காலை 8.30 மணி தொடக்கம்
வலைப்பந்தாட்டம்
பங்கேற்கும் அணிகள் :
ஜொலிஸ்ரார் வி.க.
அராலி சரஸ்வதி வி.க. 'ஏ'
அராலி சரஸ்வதி வி.க. 'பி'
யூனியன் வி.க.
வின்ஸ்ரார் வி.க.
சண்டிலிப்பாய் இந்து வி.க.
யாழ். பல்கலைக்கழகம்
யாழ். ஸ்ரார் வி.க.
அரியாலை ஐக்கியம் வி.க.
விளையாட்டு விழாவைக் கண்டு களிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஏற்பாட்டாளர்கள்: சரஸ்வதி சன சமூக நிலையம், அரியாலை

# கிளர்ந்தது வடக்கு

யாழ்ப்பாணம்






நல்லூர்







கிளிநொச்சி






வவுனியா






கொடிகாமம்



அச்சுவேலி



# முடங்கிய வடக்கு

யாழ். நகரில்






கிளிநொச்சியில்





சாவகச்சேரியில்






முல்லைத்தீவில்






நெல்லியடியில்





முள்ளியவளையில்






# வெள்ளிக்கிழமைகளில் டெங்கு ஒழிப்பு



டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக இன்று முதல், வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 1 மணித்தியால கால நேரத்தில் அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களை துப்பரவு செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி டெங்கு ஒழிப்பு பணியகம் மற்றும் சுகாதார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலை 9.30 இலிருந்து 10.30 வரையிலான ஒரு மணித்தியால காலப்பகுதியில் நிறுவனங்களை துப்பரவு செய்யும் குறித்த நடவடிக்கைகள் இடம்பெறும். மேலும், இவ்வாறு துப்புரவு செய்யப்படாத வீடுகள் அரசநிறுவனங்கள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களை கண்காணிப்பதற்காக சுகாதாரக்குழு மற்றும் முப்படை அங்கத்தவர்களைக்கொண்ட குழு ஒன்றும் பரிசோதனைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளன. (உ)

# இன்றைய கருத்தோவியம்




நன்றி : அத தெரண

## கூட்டமைப்பை கூட்டுங்கள் சிறிகாந்தா கோரிக்கை



வடமாகாண சர்ச்சைக்கு தீர்வுகாண கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு உடனடியாக கூட்டப்பட வேண்டுமென சிறிகாந்தா தெரிவித்துள்ளார். வட. மாகாண சபையில் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு சுமூகமான தீர்வை எட்டும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும் என ரெலோ அமைப்பின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிகாந்தா தெரிவித்துள்ளார். வட. மாகாண சபையில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் கலந்தாலோசிக்கும் வகையில் ரெலோ அமைப்பு நேற்று முன்னெடுத்த ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (உ)

# மதவாச்சியில் விபத்து பிக்கு உட்பட இருவர் பலி



மதவாச்சி பூனாவை பகுதியில் நேற்று இரவு ஏற்பட்ட விபத்தில் மதகுரு உட்பட இருவர் பலியானதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர் என மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். மதவாச்சி பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்த வான் எதிர் திசையில் வந்த முச்சக்கரவண்டியுடன் மோதுண்டதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது முச்சக்கரவண்டி சாரதியும் இதில் பயணம் செய்த பௌத்த மதகுருவொருவரும் ஸ்தலத்தில் பலியாகியதுடன் வானில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ)

## சதிகளை முறியடிப்போம்..!



தமிழ் மக்களுக்காக அவர்களின் தேவைகள் அறிந்து நீதிக்கும், நியாயத் திற்குமாகக் குரல் கொடுத்து வரும் ஒரே ஒரு தமிழ் தலைவர் கௌரவ முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களே என்பதை இன்று உலகமே ஏற்றுக் கொண்டுள்ளது. அமைச்சர்கள் தொடர்பாக அவர் எடுத்த முடிவு சரியாதே என வல்வெட்டித்துறை முன்னாள் நகர சபைத் தலைவர் அனந்தராஜ் குறிப்பிட்டுள்ளார். முதலமைச்சரின் நியாயமான தீர்ப்பிற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இரவோடிரவாக செய்த சதிச்செயல் தமிழினத்திற்கு அவமானத்தையும், தலைக் குனிவையும் ஏற்படுத்தியிருந்தது. பல ஆயிரக்கணக்கான போராளிகளை தியாகம் செய்த மண்ணில் பதவியைக் குறிவைத்து மேற்கொள்ளும் சதியைத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை அந்நியரிடம் சென்று சரணாகதி அரசியல் நடத்து பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# எதிர்க்கட்சியில் அமருங்கள்

முஸ்லிம் எம்.பிகளுக்கு கோரிக்கை



முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிட்டால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்க்கட்சியில் அமர வேண்டுமென முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் கோரியுள்ளார். முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாத அடிப்படையில் தொடர்ந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் 21 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க் கட்சியில் அமர வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்தார் நிகழ்ச்சியில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். முஸ் லிம்களுக்கு எதிரான அழுத்தங்களை நிறுத்துமாறு அரசாங்கத்திடம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோர வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# காய்ச்சல் அச்சம்

## களனி பல்கலைக்கு பூட்டு

களனி பல்கலைக்கழகத்தை ஒரு வாரம் மூடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாக அதிகாரி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தினுள் வேகமாக பரவி வரும் மர்மக் காய்ச்சல் காரணமாகவே இன்று நண்பகல் 12மணியுடன் பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாக அதிகாரி தீர்மானித்துள்ளார். இதனடிப்படையில் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களும் மூடப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இன்று காலை முதல் பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகள் இடம் பெறும் நிலையில், விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களையும் இன்று நண்பகல் 12.00 மணியுடன் வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# 26 ஆயிரம் பேருக்கு இரட்டைக் குடியுரிமை



நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இதுவரையில் 26ஆயிரத்து 625 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இலங்கை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்கவினால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இரட்டைக் குடியுரிமை பெற்றுக்கொள்ள விண்ணப்பம் செய்துள்ள சுமார் பத்தாயிரம் பேருக்கு இந்த ஆண்டில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 2015ம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் இதுவரையில் 36ஆயிரத்து 235 பேர் இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திடம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். (உ)

# பொலிஸாரைத் தாக்குவோம்

பொலிஸாரின் வன்முறைத்தாக்குதலுக்கு இலக்காகும் நேரத்தில் தற்பாதுகாப்புக்காக பொலிஸாரைத் திருப்பித் தாக்க வேண்டிவரும் என்று மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் சங்கம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த 12 ஆம் திகதி வத்தளையில் வைத்து போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளோட்டியொருவரை தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்குதலும் மேற்கொண்டிருந்தார். இது தொடர்பில் அகில இலங்கை மோட்டார் சைக்கிளோட்டிகள் சங்கம் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது. மோட்டார் சைக்கிளோட்டிகளை தாக்கும் பொலிஸாருக்கு நோய்கள் ஏதும் உள்ளதா என பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் பொலிஸ் சேவையில் இருந்தும் விரட்டியடிக்கப்பட வேண்டும் எனவும் குறித்த சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ)

## நாளை நாளும் கோளும்

17.06.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 03ஆம் நாள்

அட்டமி பி.ப. 11.58 வரை | பூரட்டாதி பி.ப. 02.48 வரை | மரணயோகம்

இராகுகாலம் 08.53-10.23 | சுபநேரம் 02.53-04.23 | எமகண்டம் 01.23-02.53

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உதவி | சுகம் | ஆக்கம் | தேர்ச்சி | ஆர்வம் | நன்மை | பாராட்டு | சிந்தனை | அமைதி | பாசம் | விருத்தி | வீண்செலவு |

எதிரொலி
Ethiroli

### விடுதலைப் புலி உறுப்பினருக்கு
# மரண தண்டனை

முன்னாள் விடுதலை புலி உறுப்பினர் ஒருவருக்கு மொனராகலை உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.


மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய முன்னாள் விடுதலை புலி உறுப்பினர் ஒருவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரை சுட்டுக் கொலை செய்தமை மற்றும் ஆயுதங்களை கொள்ளையிட்டமை தொடர்பிலேயே இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி தனமல்வில பொலிஸ் பிரிவில் பணியாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர். சம்பவம் தொடர்பில் நீண்ட காலம் விசாரிக்கப்பட்ட வழக்குக்கு நேற்றைய தினம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (உ)

## ஐ.எஸ். தலைவர் பலி!

ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் அபூபக்கர் அல்-பக்தாதி கடந்த மே மாதம் 28 ஆம் திகதி சிரியாவில் வைத்து கொல்லப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. ரஷ்யா வான் படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்திலேயே அவர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு சிரியாவின் ரக்கா நகரில் இடம்பெற்ற ஐ.எஸ். தீவிரவாதிகளின் படை பொதுக் கூட்டத்தின் மீது இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதன்போதே அவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1976.06.16**

தென்னாபிரிக்காவில் சுவெட்டோவில் 15,000 கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 566 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

## முதல்வருக்கு அகிலதாஸ் ஆதரவு?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடமாகாண சபை உறுப்பினரான சிவக்கொழுந்து அகிலதாஸ், வடமாகாண முதலமைச்சருக்கு ஆதரவான நிலையை எடுக்கப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக அகிலதாஸ் கையொப்பமிட்டதாக முதலில் தகவல்கள் வெளியாகி இருந்தன. இந்த நிலையில் தான் அதில் கையொப்பமிடவில்லை எனவும், முதலமைச்சருக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்திருப்பதாகவும் அகிலதாஸ் தனது ஆதரவாளர்களிடம் தெரிவித்துள்ளார்.(அ)

# புதுக்குடியிருப்பில் 60 கிலோ கஞ்சா மீட்பு



புதுக்குடியிருப்பு பொலிஸாரால் 60 கிலோ கஞ்சா மீட்கப்பட்டதோடு சந்தே கத்தின் பேரில் 3 நபர்களையும் கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பொலிஸாராருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் நேற்று இரவு 10 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே கஞ்சா கைப்பற்றப்பட்டதாக தெரியவருகின்றது. (எ)

## இளைஞர் குழுவுக்கு
### 10 ஆண்டு கடூழிய சிறை

வவுனியாவில் ஆறு பேர் கொண்ட இளைஞர் குழுவினருக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் 10 வருட கடூழியச்சிறைத்தண்டனையும் தலா 10ஆயிரம் தண்டப்பணமும் செலுத்துமாறு தீர்ப்பளித்துள்ளார். கடந்த 2013ஆம் ஆண்டு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கை ஒன்றின் போது வாள்கள், கத்திகள், பொல்லுகள் கைக்குண்டு என்பனவற்றுடன் ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணைகள் இடம்பெற்றதையடுத்து பிணையில் செல்ல அனுமதிவழங்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இந்நிலையில் நேற்று குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ)

## சட்டத்தரணிகள் ஆதரவு




வடமாகாண முதலமைச்சருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையைக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் ஊழலுக்கு எதிரான முதலமைச்சரின் செயற்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்து இன்று பணிப் புறக்கணிப்பிலும் ஈடுபட்டனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி கங்காதரன், குறிப்பிட்ட அமைச்சர்கள் பிழை செய்தார்களா, இல்லையா என்பது விசாரணை செய்து கண்டுபிடிக்க வேண்டும். அது பற்றி நாம் எதுவும் கூறமுடியாது. ஆனால் வடமாகாண முதலமைச்சருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒரு முறையற்ற செயல். இதனை சட்டத்தரணிகள் ஆகிய நாங்கள் வன்மையான கண்டிக்கிறோம் என்றார். (உ)

### மக்கள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி. விக்னேஸ்வரன்.

முதலமைச்சருக்கு ஆதரவாகவும், அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கைவிடக் கோரியும் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“ எனக்கெதிரான சதி கொழும்பிலேயே தீட்டப்பட்டது. அதனால் தான் அண்மையில் சரத் பொன்சேகா கூட, விரைவில் விக்னேஸ்வரனின் பதவி பறிக்கப்படும் என்று கூறினார். அவர் அப்படிச் சொன்னபோது இவர் ஏன் இப்படிச் சொல்கிறார்? என் மீது அவருக்கு என்ன கோபம் என்று புரியவில்லை. ஆனால் இப்போது புரிகிறது.

எனக்கு எதிராக தீட்டப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் எப்படி நான் நடந்து கொண்டாலும் பதவியில் இருந்து அகற்றலாம் என சிலர் எண்ணியுள்ளார்கள். விசாரணை அறிக்கையில் சொல்லப்பட்டதற்கு மாறாக அமைச்சர்களைப் பதவியில் இருந்து அகற்றாவிட்டால், முதலமைச்சர் ஊழல் அமைச்சர்களைக் காப்பாற்றுகிறார் என்று சொல்லி அதைச் செய்திருப்பார்கள். இப்போது நான் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததால், அவ்வாறு தண்டித்தமை தவறு என்று சொல்லி எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளார்கள். ஆனால் அப்படி என்னைப் பதவியில் இருந்து அகற்ற நினைத்தவர்களின் எண்ணத்துக்கு இன்று இப்படி வெடித்துள்ள மக்கள் புரட்சியின் மூலம் நல்ல பதில் கொடுக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான எனது கடமையை நான் தொடர்வேன்” என்றார் அவர்.(அ)

### ஐங்கர... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றவாளியாக்கிய தோடு ஏனைய இரு அமைச்சர்கள் மீதும் நடவடிக்கைக்கு முனைந்ததால்தான் அவரை பதவிநீக்க முடிவெடுத்தோம் என தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு விசேட அறிக்கை ஒன்றினை அனுப்பிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் முதலமைச் சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பித்தமை ஊழல், பணமோசடி, மற்றும் இலஞ்சத்துக்கு எதிரான எமது செயற்பாடே ஆகும். முதலமைச்சர் ஊழலுக்கு எதிராகக் கொண்டுவரும் நடவடிக்கைகளை நாங்கள் தடுக்க முயல்கின்றோம் என்ற குற்றச்சாட்டு ஆதாரமாற்றது. இரு அமைச்சர்களுக்கு எதிராக மட்டுமே நடவடிக்கை எடுப்பேன் என தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் குறிப்பிட்டார். ஆனால் முதலமைச்சர் அதனை மீறிச் செயற்பட்டுவிட்டார் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். (எ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

### முதலமைச்சருக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வணிக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகள் இயங்கவில்லை. அரச அலுவலகங்களிலும் மிகக் குறைவானவர்களே பணிக்குச் சென்றிருந்தனர். இதனால் இயல்பு நிலை பாதிப்படைந்தது.

இதேவேளை, மன்னாரில் இயல்பு நிலை பாதிக்கப்படவில்லை. மன்னார் மாவட்டம் வழமைபோலவே இயங்கியது.

ரெலோவிலிருந்து தமிழரசுக் கட்சிக்குத் தாவியுள்ள போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரனின் ஆதரவாளர்கள் கடைகளைத் திறக்கச் சொல்லியும் பஸ்களை ஓடச் சொல்லியும் மன்னாரில் நேற்று இரவும் இன்று காலையும் அடாவடி செய்ததாகவும் அதனாலேயே பேரவையின் கடையடைப்பு அங்கு வெற்றியளிக்க வில்லையென்றும் கூறப்படுகிறது. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 16.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.